DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : STC **2122/2025** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : திருமதி. கலைசெல்வி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.08.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13 August 2026.

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது அய்யாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அய்யாபுரம் காவல் நிலையத்தில் பெண் முதல்நிலைகாவலர் முருகேஸ்வரி மற்றும் உதவி ஆய்வாளர் ராஜேஸ்குமார், ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.06.2025–ம் தேதி காலை 11.30 மணிக்கு பெண் முதல்நிலைகாவலர் முருகேஸ்வரி நிலையப்பொறுப்பில் இருந்தபோது அரசு மருத்துவமனயயில் இருந்து

கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கொக்குகுளத்தை சார்ந்த அ.சா.1 –ன் ராமதுரை என்பவரின் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் வந்து பின்னர் அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.203/2025 இ.த.ச.பிரிவுகள் 296(பி), 115(2), 351(2), –ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் ராஜேஸ்குமார் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே12.30 மணிக்கு வழக்கின் சம்பயிடம் சென்று சாட்சிகள் ராமதுரை மற்றும் மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. தேவி பிரபாகல்யாணி என்பவரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற **காயச் சான்றதிழ் அ.சா.ஆ. 6 ஆகும்**. பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 வரை தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமனற்த்தில் ஆஜராகி பிணையில் சென்றார்கள். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 19.06.2019 –ம் தேதி எதிரிகள் மீது 296(பி), 115(2), 351(2) –ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், மருத்துவரிடம்

காயச்சான்றிதழ் பெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

M MARI

Digitally signed by M MARI
Date: 2026.08.13 18:13:27 +0530